

வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு தொகுதி மத்திய ஊனை ஊராட்சிமோட்டூர் கிராமத்தில் புதிய உடற்பயிற்சி கூடத்தை தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு திறந்த வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு மத்திய ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், ஒன்றிய குழு தலைவர் பாஸ்கரன், மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணமேனன் ஒன்றிய நிர்வாகிகள் ராமச்சந்திரன் செந்தில்குமார் அஸ்ஸாம் பாஷா உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒன்றிய நிர்வாகிகள் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் இருந்தனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் கணியம்பாடி ஒன்றியம் அ.கட்டுபடி கிராமம் லேட் ஜோசப்பின் மனைவியும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் டான் போஸ்கோவின் பெரியம்மா ஜெ.மரியரோஸ் இயற்கை எய்தினார். இதையடுத்து அவரது இல்லத்திற்கு அமைச்சர் மாவட்ட செயலாளர் ஆர்.காந்தி நேரில் சென்று அவரது உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்ட மன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், ஒன்றிய செயலாளர் வி.பி.எஸ். கலைசந்தர் பொதுக்குழு உறுப்பினர் சீனிவாசன் லாரன்ஸ் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்டம் நன்னிமங்கலத்தில் தாய் – தந்தையை இழந்து உறவினர் வீட்டில் வசித்துவரும்

# குழந்தைகள் சுவாதி - ஸ்வேதா - சிவேஷ்வருக்கு முதல்வர் வீடியோகாலில் ஆறுதல்!

## இலவச வீட்டு மனைப்பட்டாவினை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – ஆட்சியர் மோகனச்சந்திரன் – பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினர்!

திருவாரூர், டிச.29-

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் தாலுக்கா, நன்னிமங்கலம் மெயின்ரோட்டில் தாய், தந்தையை இழந்து சித்தி, சித்தப்பா பாதுகாப்பில் இருந்துவரும் வசித்துவரும் குழந்தைகள் சுவாதி, ஸ்வேதா, சிவேஷ்வர் ஆகியோரிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலைபேசியில் வீடியோ கால் வாயிலாக ஆறுதல் கூறியபிறகு, தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட, இலவச வீட்டு மனைபட்டாவினைகுழந்தைகளின் வீட்டிற்கு நேரடியாகச் சென்று தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர். டி. ஆர். பி. ராஜா, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வ. மோகனச்சந்திரன், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் ஆகியோர் வழங்கினார்கள்.





திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் தாலுக்கா, நன்னிமங்கலம் மெயின்ரோட்டில் தாய், தந்தையை இழந்து சித்தி, சித்தப்பா பாதுகாப்பில் இருந்துவரும் வசித்துவரும் குழந்தைகள் சுவாதி, ஸ்வேதா, சிவேஷ்வர் ஆகியோரிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலைபேசியில் வீடியோ கால் வாயிலாக ஆறுதல் கூறியபிறகு, தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட, இலவச வீட்டுமனை பட்டாவினை குழந்தைகளின் வீட்டிற்கு நேரடியாக சென்று தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி. ராஜா, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வ. மோகனச்சந்திரன், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் ஆகியோர் வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்ச சர் அவர்கள் அலைபேசியில் வீடியோ கால் வாயிலாக குழந்தைகளிடம் தைரியமாக இருக்க வேண்டுமெனவும், கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமெனவும் அறிவுரை வழங்கினார்கள்

மேலும், தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் அன்புக்கரங்கள் திட்டத்தின் மூலம் ஜனவரி மாதம் முதல் மாதந்தோறும் இக்குழந்தைகளுக்கு ரூ.2000 கிடைக்க வழிவகைசெய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் யோகேஸ்வரன், கூத்தாநல்லூர் நகர்மன்றத்தலைவர் திருமதி.பாத்திமா பஷிரா தாஜ், கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையர் செல்வி.சிவரஞ்சனி, கூத்தாநல்லூர் வட்டாட்சியர் திருமதி. வசுமதி, மன்னார்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் நமச்சிவாயம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இளைஞர் எழுச்சி நாள் விழா!

# கரூர் மாவட்டத்தில் கிரிக்கெட் போட்டி!

## வெற்றி பெற்றவர்களுக்கு வி.செந்தில் பாலாஜி பரிசுகள் வழங்கினார்!

கரூர்,டிச.29–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், தமிழ்நாட்டிலிருந்து உலகத்தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் முனைப்பில் அயராது உழைத்திடும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை கொண்டாடும் வகையில், ரூ. 49 லட்சம் மதிப்பில் மொத்த பரிசுத் தொகையுடன், கரூர் மாவட்ட கழகம் சார்பில் விளையாட்டுப் போட்டிகள் நவம்பர் 15 ம் தேதி தொடங்கியது. இந்த விளையாட்டு திருவிழாவில், டிசம்பர் 28 வரை, கரூர் மாவட்டத்தில், கபடி, சிலம்பம், சதுரங்கம், கைப்பந்து, இறகுப்பந்து, கால்பந்து, சைக்கிள் ரேஸ், ஸ்கேட்டிங், மராத்தான், டர்ஃப் கிரிக்கெட்,

சிலம்பம் ஆண் பெண்களுக்கான போட்டிகள், கபடி ஆண், பெண்களுக்கு போட்டிகள், சதுரங்கம் போட்டிகள், ஆடவர் மகளிருக்கான மாரத்தான் போட்டிகள், சைக்கிள் போட்டிகள் ஆண் பெண்களுக்கான இறகுபந்து போட்டிகள், நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

அந்த வகையில், கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மொத்த பரிசுத்தொகை ரூ 2,05,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான ஆண்கள் கிரிக்கெட் போட்டிகள், கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி நடைபெற்றன.

முதல் பரிசை பால்மடைப்பட்டி STYEN 11 அணியும், இரண்டாவது பரிசை பாண்டியன் பாய்ஸ் அணியும், மூன்றாவது பரிசை வேலாயுதம்பாளையம் சரவணா பிரதர்ஸ் அணியும், நான்காம் பரிசை தாந்தோனி ICC அணியும் வென்றனர். சிறந்த பேட்ஸ்மேன் விருதை STYEN 11 அணியை சேர்ந்த சுகுந்தன் , சிறந்த பவுலருக்கான விருதை பாண்டியன் பாய்ஸ் அணி வீரர் கனகராஜ், சிறந்த ஆல்ரவுண்டருக்கான விருதை STYEN 11 அணியை சேர்ந்த காமராஜ் ஆகியோர் வென்றனர்.

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி செந்தில் பாலாஜி எம்எல்ஏ வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். மேலும்

கலந்துக் கொண்ட அனைத்து அணி வீரர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களையும், வென்ற அணிகளுக்கும் வீரர்களுக்கும் அன்பான வாழ்த்துகளையும் தெரிவித்தார்.


### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாம்! பெரம்பலூர் மாவட்ட

# ஒன்றிய,நகர,பேரூர் செயலாளர்கள் பணியில் ஈடுபட வேண்டும்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

*பெரம்பலூர். டிச.29 -*

*பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாமில் கழகத்தினர் முனைப்பாக ஈடுபட வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கூறியுள்ளார்.*



*இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு, இந்திய தேர்தல் ஆணையத்தால் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணிகள் நடைபெற்று, தற்போது வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிக்கு வாக்குச்சாவடிகளில் சிறப்பு முகாம் 27.12.2025, சனிக்கிழமை, 28.12.2025, ஞாயிற்றுக்கிழமை மற்றும் 03.01.2026,சனிக்கிழமை 04.01.2026, ஞாயிற்றுக்கிழமை ஆகிய தேதிகளில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிக்கு வாக்குச்சாவடி அலுவலர்களால் விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. கழக நிர்வாகிகளுடன் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ2), வாக்குச்சாவடி டிஜிட்டல் ஏஜெண்டுகள் (பி.டி.ஏ) , வாக்குச் சாவடி (பி.எல்.சி), கிளை உறுப்பினர்கள் நிகழ்ச்சி கிளை, வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் வாக்காளர் பட்டியலை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து வாக்குச் சாவடி சிறப்பு முகாமில் விடுபட்ட வாக்காளர்களையும் புதிதாக சேர்க்க வேண்டிய வாக்காளர்களையும் கழக ஆதரவு வாக்காளர்களையும் சேர்க்க வேண்டும். இறந்த வாக்காளர்கள், நிரந்தரமாக குடி பெயர்ந்த வாக்காளர்கள், போலி வாக்காளர்களை நீக்கிடவும் பெயர், முகவரி திருத்தம் செய்திடவும், உரிய படிவத்தை நிரப்பி வாக்குச்சாவடி அலுவலர்களிடம் வழங்கிட வேண்டும். இந்த பணி சிறப்பாக அமைந்திட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் உள்ளிட்டவர்களிடம் உரிய அறிவுறுத்தல் வழங்கி 4 நாட்கள் நடைபெறும் சிறப்பு முகாமில் சிறப்பாக பணியாற்றிட வேண்டுமென்றும், இந்த பணியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், .தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வாக்குச்சாவடியில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு முகாமில் பங்கேற்று பணியாற்ற வேண்டும். ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாமில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்ட விவரங்களை தலைமை கழகத்திற்கு அனுப்பிடும் வகையில் பெரம்பலூர் மாவட்ட கழகத்திலும் பட்டியலை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### தமிழ்நாடு அரசு

# எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கில் செயல்பட்டு வருகிறது!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

*திண்டுக்கல், டிச.29-*

*தமிழகத்தில் எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது என போக்குவரத்து நகரில் நடைபெற்ற நியாயவிலைக்கடை திறப்பு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியது டன் 150 குடும்ப அட்டை உள்ள பகுதிகளுக்கும் பகுதி நேர நியாயவிலைக்கடை திறக்கப்படும் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்தார்.*



*திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், கலிக்கம் பட்டி போக்குவரத்து கழக நகரில் நடைபெற்ற புதிய நியாயவிலைக் கடைத்திறப்பு விழாவிற்கு மாவட்ட ஊரக வளர்சி திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமை தாங்கினார். திமுக மாநில செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கோமதி செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அபிராமி கூட்டுறவு சங்க மேலாளர் பரமேஸ்வரி வரவேற்றார். நியாயவிலைக் கடையை திறந்து வைத்து பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கிய பின்பு அவர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழ்நாடு முதலமைச்சராக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களின் நலனை கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்டு "எல்லோருக்கும் எல்லாம்" என்ற உன்னத நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துணவு திட்டம். மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம், விடியல் பயணம் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை அறிவித்து அதற்கான நிதி ஆதாரங்களை ஒதுக்கி நல்ல முறையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.*

*மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, ஒரு குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் முதியோர் உதவித்தொகை 60 வயது கடந்தால் வழங்கப் பட்டது. அதேபோல் தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித்தொகை கிடைக்கச் செய்வதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக உள்ளார். 60 வயது கடந்த அனைவருக்கும் முதியோர் உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது, எனவே, முதியோர் உதவித்தொகை இதுவரை பெறாதவர்கள் மனு கொடுத்தால் அந்த மனுவின்மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு, முதியோர் உதவித்தொகை வழங்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் 1,500 ரேசன் அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக்கடை என்ற விகிதத்தில் நியாய விலைக் கடைகள் இருந்தன. முதலமைச்சர் அவர்கள் 100 ரேசன் அட்டைகளுக்கு ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையினை உருவாக்கி வருகிறார்கள். மேலும், நியாய விலைக்கடைகளை பிரிக்கப்பட்டு பொதுமக்கள் வசிக்கக்கூடிய வீட்டிற்கு அருகில் விரும்புகின்ற குடிமைப்பொருள் பெற்றுக்கொள்ள வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.*

*பெண்களின் நலனுக்காக நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ளும் விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் புதிய பேருந்துக்கள் வாங்கப்பட்டு தற்போது அனைத்து பகுதிகளிலும் புதிய பேருந்துகள் இயக்கப் பட்டு வருகிறது. அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் என்ற திட்டம் வாயிலாகவும், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் என்ற திட்டம் வாயிலாகவும் மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது.*

*பொதுமக்கள் தங்களிடம் இருக்கும் இடங்களுக்கு பட்டா வேண்டி அலையாமல் கோரிக்கைகளாக பதிவு செய்யுங்கள், அந்தப்பகுதி வட்டாட்சியர் அவர்களிடம் தெரிவித்து எளிமையான முறையில் வீட்டுமனை பட்டா விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்து தரப்படும். அந்த வகையில் இதுவரை தமிழ்நாடு முழுவதும் 24 இலட்சம் பேருக்கு வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் 10,000 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு வருகிறது. அதில் ஆத்தூர் வட்டத்தில் 3000 கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு வருகிறது.*

*அரசின் திட்டங்களை மக்களுக்கு சென்றடைய செய்வதிலும், வளர்ச்சித் திட்டப்பணிகளை அனைத்துப் பகுதிகளிலும் சீராக நிறைவேற்றுவதிலும் இந்த அரசு உறுதியாக உள்ளது. இது மக்களுக்கான அரசு, ஏழைகளுக்கான அரசு. பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிட இந்த அரசு என்றென்றும் தயாராக உள்ளது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கருத்தை வலுப்படுத்தும் விதமாக அவருக்கு என்றென்றும் ஆதரவு அளிக்க வேண்டும் என அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசினார். நிகழ்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், ராஜேந்திரன், வசந்தா கென்னடி, ஒன்றிய மாவட்ட காங்கிரஸ் துணை செயலாளர் மச்சகாளை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜ கணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் ஜெயராமன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் உலகநாதன், ஆறுமுகம், கோமதி செல்வக்குமார், செட்டியபட்டி ராஜா, அரசு ஒப்பந்த காரார்கள் ஜீசஸ் அகஸ்டீன், மெல்வின், விக்னேஸ்வரன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.என்.போஸ், மாவட்ட தகவல் தொழில்நுட்ட அணி ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் பஞ்சம்பட்டி மணி, விடுதலை முருகன், ஊராட்சி செயலர்கள் அழகர்சாமி, தண்டபாணி, அம்பாத்துரை செந்தில்குமார் கோட்டைப்பட்டி நிர்வாகிகள் பாண்டி, செயலாளர் முருகன், நியாய விலைக்கடை விற்பானையாளர்கள் முத்துலெட்சுமி, பாண்டீஸ்வரி, பாலாஜி உட்பட பலர் கலந்து கொண்டனர்.*



வேலூர் வடக்கு மாவட்டம் காட்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவலம் பேரூராட்சியில் கிளை செயலாளர்கள், பாக முகவர்கள் மற்றும் பிடிஏக்கள் உடனான ஆலோசனைக் கூட்டம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி பரப்புரை செயல்பாடுகள், தேர்தல் சார்ந்த களப்பணிகள் குறித்து இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக நிர்வாகிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், ஏனாதி மங்கலம் ஊராட்சியில் உள்ள வாக்குசாவடிகளில் புதிய வாக்காளர்கள், சேர்த்தல் மற்றும் நீக்குதல் சிறப்பு முகாமை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஆனந்த், கிளைச் செயலாளர் ஆறுமுகம், மற்றும் வாக்குசாவடி முகவர்கள், பாக நிலை முகவர்கள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.